# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி திங்கள் 17 ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.702/2022 –ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.02/2025**

**மற்றும்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.03/2025**

**வழக்கிடை விண்ணப்ப எண்.02/2025**

**A.S. செலின் அகஸ்டின்மேரி ... மனுதாரர்**

**–எதிர்–**

T. **மார்ட்டின் ... எதிர்மனுதாரர்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.03/2025**

T. **மார்ட்டின் ... மனுதாரர்**

**–எதிர்–**

**A.S. செலின் அகஸ்டின்மேரி ... எதிர்மனுதாரர்**

இவ்விரு மனுக்களும் இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வழக்கிடை விண்ணப்ப எண் 02/2025 மனுவின் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திருமதி.S.சுபா** அவர்களும் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திருமதி.V.புனிதா** அவர்களும் வழக்கிடை விண்ணப்ப எண்.03/2025 மனுவின் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திருமதி.V.புனிதா** அவர்களும் எதிர்மனுதாரருக்காக

வழக்குரைஞர் திருமதி.**S.சுபா** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இவ்விரு மனுக்களிலும் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**பொதுவான ஆணையுரை**

செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை மனுதாரர்/பிரதிவாதி நிறைவேற்றத் தவறியதால் 18.02.2025 ஆம் தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடிச் செய்யப்பட்ட வழக்கிடை விண்ணப்ப எண். 01/2024 ஐ மீண்டும் கோப்பிற்கு எடுத்துச் செலவுத்தொகை செலுத்து-வதற்கான காலவரம்பை நீட்டித்து ஆணையிடக் கோரி இவ்விரு மனுக்களும் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **09-**ஆம் வகுமுறையின் **09-**ஆம் விதியின்கீழும் **151-**ஆம் பிரிவின்கீழும் தாக்கல்செய்யப்-பட்டுள்ளன.

**மனுவின் சுருக்கம்**

01. முதலேற்பு வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல்செய்யாததால் 17.04.2023 ஆம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக ஆக்கப்பட்டார். அவ்வாறு மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றம் தோன்றாத் தரப்பினராக்கி பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்ய கோரி மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல்செய்த வழக்கிடை விண்ணப்ப எண்.01/2024 ஆனது 28.01.2025 ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டு 18.02.2025 ஆம் நாளுக்குள் மனுதாரர்/ பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதிக்கு 1000/-உரூபாயை செலவுத் தொகையாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

மனுதாரர்/பிரதிவாதி வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததால் 18.02.2025-ஆம் நாளுக்குள் செலவுத் தொகையை செலுத்த முடியாமல் போனது. மனுதாரர்/பிரதிவாதி வேண்டும் என்றோ அலட்சியத்துடனோ இருக்கவில்லை. ஆகையால், 18.02.2025-ஆம் தேதியன்று வழக்கிடை விண்ணப்ப எண்.01/2024-யை தள்ளுபடிச் செய்து பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்து அந்த மனுவை மீண்டும் கோப்பில் எடுத்து செலவுத்தொகையை செலுத்துவதற்கான காலவரம்பை நீட்டித்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

02. மனுக்களில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் பொய்யானது. மனுதாரர்/பிரதிவாதி இந்த வழக்கைக் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். தவறுகைக்காக மனுவில் சொல்லப்- பட்டுள்ள காரணம் ஏற்புடையதல்ல. ஆகையால், இந்த மனுக்களை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**03. இவ்விரு மனுக்களும் அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

**04.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குகள் தகுதிபாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பு நெறியாகும். மனுதாரர் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதாக உள்ளன. ஆகையால் இந்த மனுவை அனுமதித்து மனுதாரர்/பிரதிவாதிக்கு வழக்கை தொடர்ந்த

நடத்த ஒரு வாய்ப்பு வழங்குவது உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**05**. இருப்பினும், காலதாமதத்தால் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்ட இன்னலை ஈடுசெய்ய இவ்விரு மனுக்களுக்கும் மொத்தமாக 3000/. உரூபாயும் ஏற்கனவே வழக்கிடை விண்ணப்ப எண் 01/2024 ல் விதிக்கப்பட்ட 1000/-உரூயையும் சேர்த்து மொத்தம் 4000/-உரூபாயை மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதிக்குச் செலுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதிமுடிவு**

**06**. இறுதியாக,மனுதாரர்/பிரதிவாதி 15.09.2025-ஆம் தேதியன்றுக்குள் 4000/- உரூபாயை எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**ஒப்பம்/–(வே.புகேழந்தி)**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

பொதுவான உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.02/2025 , 3/2025 in மு.வ.எண்.702/2022
நாள் 02.09.2025